# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ்க்காணும் பதவிக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவி நிரந்தரமானது, ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு உரித்துடைய பதவியாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை கொழும்பில் மாத்திரம் அமைந்திருப்பதுடன் வேறு கிளை அலுவலகங்கள் இல்லாத காரணத்தினால் இடமாற்றங்கள் கிடையாது.

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் தவிர்ந்த)

**பதவிகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி**

(அ) கல்வி பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில்
i. சிங்களம்/தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கிலமொழி
ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்கள் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்

(இ) பதவிக்கு விசேடமான ஏனைய தேவையான தகைமைகள்

கணனி தரவுகள் தயாரித்தல்/தட்டச்சு பற்றிய 06 மாதத்திற்கு குறையாத மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றை பயின்று இருத்தல் அல்லது வேறு அதற்கு சமமான மட்டத்தில் திறன் பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - திறன் அற்ற, அரை திறன் மற்றும் திறன் சேவை வகுதியில் "ஆ", "இ","ஈ" இல் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்வி பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில்
i. சிங்களம்/தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கிலமொழி
ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

கணனி தரவுகள் தயாரித்தல்/தட்டச்சு பற்றிய 06 மாதத்திற்கு குறையாத மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றை பயின்று இருத்தல் அல்லது வேறு அதற்கு சமமான மட்டத்தில் திறன் பெற்றிருத்தல்

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெறுவதுடன் அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்குக் கிட்டிய நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருடம் தொடரான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

18 வயதிற்கு குறையாது மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அதிகூடிய வயதெல்லை பொருந்தாது

**பதவியுடன் சம்பந்தப்பட்ட சம்பள கட்டம் :**

முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 இன் பிரகாரம் MA 1-1-2016 (27910-10x300-7x350-4x495-20x660-48,540/- சம்பள அளவில் ஆரம்ப சம்பள கட்டணமான ரூ.27,910/- மற்றும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**சேர்த்துக்கொள்ளும் முறைமை:**

எழுத்து மூல போட்டிப் பரீட்சையில் மற்றும்/அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடத்தப்படும் கட்டமிடப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

எழுத்து மூல போட்டிப் பரீட்சைக்கான பாடவிதானம்
(அ) மொழித்திறன்
(ஆ) தகுதிகாண் பரிசீலனை மற்றும் சாதாரண அறிவு
(இ) கணனி பரிசீலனை

**வேறு விடயங்கள்**

**சகல விண்ணப்பதாரிகளும்,**

(i) இலங்கை பிரஜைகளாக இருத்தல்
(ii) பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை சரியாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(iii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

- அரச, அரச சார்பு நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவன தலைமையூடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024.08.14 அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு பிரதம நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபன கட்டிடம், 02ம் மாடி, இல.130, டபிள்யூ.ஏ.டி.ராமநாயக்க மாவத்த, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை**

tamilguru.lk

---

# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை
## முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. தனிப்பட்ட தகவல்கள்
   1.1 முழுப்பெயர் :-
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :
   1.3 ஆணா/பெண்ணா என்பது :
   1.4 பிறந்த திகதி :
   1.5 வயது : வருடம் : ................. மாதம் :........... திகதி:...............
   1.6 தேசிய அடையாள அட்டை இல :
   1.7 தொ.பே.இலக்கம் : நிரந்தர :....................... கையடக்க:...................
   1.8 மின்னஞ்சல் முகவரி:
   1.9 முகவரி :
   1.10 பதிவு மாவட்டம் :
2. பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்:-
3. கல்வித்தகைமைகள் (கூடிய தகைமையில் இருந்து ஒழுங்கு முறையில் குறிப்பிடுங்கள்)

| தொடர் இல | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி/ செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் / சித்தி |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

4. தொழில்சார் தகைமைகள்

| தொடர் இல | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி/ செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் / சித்தி |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

5. அனுபவம் - (தற்போது வகிக்கும் பதவியில் இருந்து ஒழுங்கு முறையில் குறிப்பிடுங்கள்)

| தொடர் இல | பதவி | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |

6. விண்ணப்பதாரி பற்றிய தகவல்களை விசாரிக்கக் கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி மற்றும் தொ.பே. இலக்கம்
7. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
   இங்கு தரப்பட்டுள்ள என்னைப்பற்றிய தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானது ஆகும் என தெரிவிக்கிறேன்
   **திகதி :** ..............................
   **விண்ணப்பதாரியின் கையொப்பம்**
8. அரச, அரச சார்பு நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரி ஆயின் தமது நிறுவன தலைமையின் சான்றிதழ் இவ் விண்ணப்பதாரியான திரு/திருமதி/செல்வி ........................................ தற்போது எமது நிறுவனத்தில் ......................... ஆக நிரந்தர/ தற்காலிக/தயாசமய ஊழியராக சேவையாற்றுவதாகவும், அவர் இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

..............................................
**நிறுவன தலைமையின் கையொப்பம் (உத்தியோகபூர்வ முத்திரை)**

**கவனிக்கவும்**

குறித்த மாதிரியின் பிரகாரம் மாத்திரம் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்புவதுடன் உங்களது கல்வி மற்றும், தொழில்சார் தகைமைகளை உறுதிசெய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். இம்மாதிரிக்கு அமைவாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், பூர்த்தியற்ற விண்ணப்பங்கள், காசு செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.